**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 1919/ஆ5/2023, நாள். 30.06.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – நான் முதல்வன் – உயர்கல்வி வழிக்காட்டல் முகாம் – 04.07.2023 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் – 2022–2023ம் ஆண்டில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 12–ம் வகுப்பு முடித்து உயர்கல்வி தொடராத மாணவர்களுக்கான சிறப்பு முகாம் நடத்துதல் – சார்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண். சி1/2320/2023, நாள் .23.06.2023

•••••

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி அரசு / அரசு உதவிபெறும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்பட்டுள்ளது . அதன்படி, வேலூர் மாவட்டத்தில் 2022 – 2023ம் கல்வி ஆண்டில் 12ம் வகுப்பு முடித்த மாணவர்கள் , அனைவரும் இவ்வாண்டு 2023 – 2024ல் உயர்கல்வி தொடர்ந்துள்ளனரா என்பதனை அறிந்திடவும் , அவ்வாறு உயர்கல்வி தொடராத மாணவர்கள் இருப்பின் அதற்கான காரணத்தை கண்டறிந்து , அதனைக் களைந்து அவர்கள் உயர்கல்வி தொடர்ந்திட மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் கணியம்பாடி, காட்பாடி, அணைக்கட்டு, வேலூர் ஆகிய ஒன்றியங்களுக்கு 27.06.2023 அன்று காட்பாடியில் உள்ள (VIT–Anna Auditorioum) அரங்கில் சிறப்பு முகாம் நடைபெற்றது.

குடியாத்தம், பேர்ணாம்பட்டு மற்றும். கே.வி. குப்பம் ஆகிய ஒன்றியங்களுக்கு மதிப்பிற்குரிய வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 04.07.2023 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை குடியாத்தத்தில் உள்ள KMG கல்லூரியில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளதால் இணைப்பில் காணும் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் மாணவர்களை பொறுப்பு ஆசிரியர் உடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாவட்டக் கல்வி அலுவலர் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு உடன் இத்தகவலை தெரிவிக்குமாறும் உரிய துரித நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>தலைமையாசிரியர்கள் கவனத்திற்கு.</u>

1. இணைப்பில் குறிப்பிட்டுள்ள பள்ளிகள் மட்டுமே 04.07.2023 அன்று கலந்து கொள்ள வேண்டும்.
2. 25 மாணவர்களுக்கு 1 பொறுப்பாசிரியர் வீதம் தலைமையாசிரியர் அழைத்துவர வேண்டும்.
3. பதிவு செய்யப்படும் நேரம் காலை 09.00 மணி
4. பொறுப்பாசிரியர் மடிக்கணினியுடன் வரவேண்டும்.
5. மாணவர்களுடன் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள பள்ளிகளின் மாணவர்களின் உயர்கல்வி வழிகாட்டி மற்றும் பயிற்சி பெற்ற ஆலோசகர் (Carrer Guidance Counseller Teacher) தவறாது இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும்.
6. இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து முகாம் நடைபெறும் அன்று ஒப்படைக்க வேண்டும்.

இணைப்பு.

1. பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியல்
2. பொறுப்பாசிரியர்கள் பட்டியல்
3. படிவம்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக்கல்விஅலுவலர், (இடைநிலைக்கல்வி), வேலூர் மாவட்டம்
2. தலைமையாசிரியர்,
   அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்

நகல்–

ஒருங்கிணைந்த உதவி திட்ட அலுவலர் , அனைவருக்கும் கல்வி இயக்ககம், காட்பாடி